# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 16 வெள்ளிக்கிழமை 30.05.2025 கதிர் 210



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




## தமிழகத்தில் இருந்து திரும்பிய முதியவர் விளக்கமறியலில்

# ஏனையோர் நாட்டுக்குப் பயந்து வராமல் இருப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடா?

### அநுர அரசு மீது சுமந்திரன் பாய்ச்சல்



இந்திய அகதி முகாமில் பல தசாப்தங்களாகத் தஞ்சமடைந்திருந்த யாழ். ஏழாலையைச் சேர்ந்த 75 வயது முதியவர் நேற்று நாடு திரும்பியபோது குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று வியாழக்கிழமை பலாலியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த முதியவர் இன்று வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிவான் 7

# உங்களை நம்பி நாடு திரும்புபவர்களை ஏன் கைது செய்து சிறையில் அடைக்கிறீர்கள்?

## ஜனாதிபதி அநுரவிடம் மனோ எம்.பி. கேள்வி

கொழும்பு, மே 30

"வெளிநாடு சென்ற தமிழர்களை நீங்கள்தானே திரும்பி வரச் சொல்கிறீர்கள்? உங்களை நம்பி நாட்டுக்கு வந்தால் கைதா? கைதானவர்களைப் பிணையில் வெளியே விடாமல் எதற்காகச் சிறையில் அடைக்கிறீர்கள்?" - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தலைமையிலான அரசை நோக்கிக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இது தொடர்பில் மனோ எம்.பி. தனது எக்ஸ் தளத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:- 7



## கொழும்பில் பெண்ணின் சடலம் மீட்பு!

### அடையாளம் காணப்படவில்லை



கொழும்பு, மே 30

கொழும்பில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோதறை, அளுத்மாவத்தை வீதியிலுள்ள பாலத்துக்கு அருகில் இருந்து நேற்று மேற்படி பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

60 வயது மதிக்கத்தக்க பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும், அவர் வெள்ளை 7

## யானை தாக்கி ஒருவர் மரணம்!

### சம்பூரில் துயரம்



திருகோணமலை, மே 30

திருகோணமலை மாவட்டம், சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள கணேசபுரம் பகுதியிலுள்ள கணேசபுரம் பிரதான வீதியில் காட்டு யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மூதூர் - 7

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சரும் யாழ். 7








- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வரி வாரம் ஒன்றை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானம்



கொழும்பு, மே .30

“பது சக்தி” என்ற பெயரில் வரி வாரம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் யூ.டி.என். ஜயவீர தெரிவித்தார்.

எதிர்வரும் ஜுன் 2 முதல் 7 வரை ஒரு வார காலத்திற்கு இந்த வரி வாரம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், இதன் மூலம் வரி செலுத்துதல் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். இதுவரை 10 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வுஐசு (வரி அடையாள இலக்கம்) வழங்கியுள்ளது. ஆனால், இந்த இலக்கங்கள் பல்வேறு தகவல் மூலங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டவையாகும்.

எனவே, மக்களுக்கு நாம் குறிப்பாகக் கூற விரும்புவது, உங்களுக்கு ஏற்கனவே திணைக்களத்தால் வுஐசு இலக்கம் வழங்கப்பட்டிருக்கலாம். ஆகவே, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையதளத்திற்கு சென்று, உங்கள் அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தி உங்களுக்கு வுஐசு இலக்கம் வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க முடியும்.

வுஐசு இலக்கம் இல்லாதவர்கள், திணைக்களத்திற்கு நேரடியாக வராமல், முதலில் இணையதளத்தில் சரிபார்க்கலாம். ஏற்கனவே வுஐசு இலக்கம் இருந்தால், அதன் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற முடியும்,” என்று ஜயவீர மேலும் கூறினார். (ஐ)

# மட்டக்களப்பில் சுற்றிவளைக்கப்பட்ட பிள்ளையான் குழு

அநுர அரசாங்கம் ஆட்சியமைத்த பின்னர் நாட்டில் தொடர்ந்து கைதுகள் இடம்பெறுகின்றன, தடுப்பு காவல்கள் தொடர்கின்றன, குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினரின் விசாரணைகள் தீவிரமாகின்றன.

இதனடிப்படையில், பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்(வுயு) கீழ்பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவின் அடிப்படையில் தற்போது, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தொடர்புபட்ட பல கொலை மற்றும் கொள்ளைகள் தொடர்பிலான விடயங்கள்குறித்து, குற்றத்தடுப்புபுலனாய்வு பிரிவினர் களத்திற்கு சென்று நேரடியாகவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பாக ஆரையம்பதி பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள், காத்தான்குடி பகுதியில் சாந்தன் படுகொலை, கல்லடி பாலம் பகுதியில் இடம்பெற்ற பொலிஸ் சக்தியின் படுகொலை என பல விடயங்கள் குறித்து பிள்ளையானிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன(ஐ)

# பொம்மைக்குள் போதைப்பொருள் : இத்தாலிய பிரஜை கைது

கொழும்பு, மே .30

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில், இன்று (05) அதிகாலை 10 கிலோ 323 கிராம் கொகெய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மற்றும் விமான நிலைய சுங்க பிரிவு அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சோதனையில் குறித்த போதைப்பொருளை விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டு வந்த 38 வயதுடைய இத்தாலிய பிரஜை கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் இந்த போதைப்பொருளை மூன்று டெடி பியர் (வுநனனல டீநயச) பொம்மைகளுக்குள் மறைத்து கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாடு முழுவதிலும் 16 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றம்!



கொழும்பு, மே .30

நாடுமுழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களின் 16 பொறுப்பதிகாரிகளுக்கு, உடனடி இடமாற்றங்களை இலங்கை பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, தேசிய பொலிஸ் ஆணையத்தின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன.

இதன்படி, அவை உடனடியாக நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்தள, தங்காலை, வாதுவ, நிந்தவூர், பன்சியகம, கிளிநொச்சி, பொத்தபிட்டி, கம்பொல, தர்மபுரம், கலன்பிந்துனுவேவ ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளே மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனை தவிர, பொலிஸின் சட்டப்பிரிவு உட்பட்ட பல முக்கிய பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அண்மைக்காலமாக தொடர்ந்தும் பொலிஸ் தரப்பில் பல்வேறு இடமாற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# சீன அமைச்சர் ஜனாதிபதியை சந்தித்தார்



கொழும்பு, மே .30

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங் வென்டாவோ, நேற்று (29) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

தற்போது இலங்கையில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செயல்படுத்தும் வெளிப்படையான வேலைத்திட்டம் காரணமாக சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த அமைச்சர், 100 இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுடனான இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

சவாலான காலகட்டத்தில் இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில், வர்த்தகம் மற்றும் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், உலகளாவிய பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்கொள்ளும் போது இலங்கைக்கு தேவையான ஆதரவை வழங்க சீனா அரப்பணிப்புடன் செயற்படுவதாக சீன வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கடந்த சீன விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது சீன வர்த்தக அமைச்சரின் இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

மேலும், சீன அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவுசெய்தல் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (ஐ)

## அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடும் இலங்கை



அமெரிக்கா, இலங்கை மீது விதித்த கட்டணக் கொள்கைகளை மாற்றியமைப பதற்கான, இரண்டாவது உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று வோசிங்டனில் நடைபெற்றது.

நிதி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும தலைமையிலான இலங்கை தூதுக்குழுவின் பங்கேற்புடன் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் அழைப்பின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடலின்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, 2025 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று வோசிங்டனில் முதல் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், இலங்கையும் அமெரிக்காவும் விரைவில் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## கொழும்பில் மரங்கள் முறிந்து பல வீடுகள் சேதம்: நள்ளிரவில் வீடுகளை விட்டு வெளியேற்றம்







கொழும்பு, மே .30

மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் நேற்றிரவு வீசிய கடும் காற்றின் காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

கொள்ளுப்பிட்டியில் இருந்து வெள்ளவத்தை வரையிலான வீதி, கொழும்பு-காலி வீதியின் கிராண்ட்பாஸை சுற்றியுள்ள பல பகுதிகளிலும் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

இதன் காரணமாக கிராண்ட்பாஸில் உள்ள சென் ஜோசப் வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்தமையினால் அருகிலிருந்த 6 வீடுகள் சேதமடைந்தன.

இதன் போது குறித்த வீடுகளில் இருந்தவர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொண்டதாக தெரியவந்துள்ளது. (ஐ)

## ஆடைத்தொழிற்சாலை மூடப்படுவது சாதாரண விடயமே



கொழும்பு, மே .30

ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்படுவது சாதாரண விடயமே என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி அரசியல் விவாதமொன்றில் பங்குபற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


நெக்ஸ்ட் ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்ட விவகாரம் தேவையற்ற வகையில் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைத்தொழிற்சாலைகள் மூடப்படுவதும் திறக்கப்படுவதும் சாதாரண விடயமே இதனை தேவையின்றி அரசியல் மயப்படுத்தக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

நிறுவனங்களின் தீர்மானத்திற்கு அமையே இந்த நிறுவனங்கள் மூடப்படுவதாகவும் கடந்த ஆண்டிலும் கொக்கல பகுதியில் ஆடைத்தொழிற்சாலையொன்று மூடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கைத்தொழிற்சாலைகள் மூடப்படுவதனால் முதலீடுகள் வெளியே செல்வதாக கருதப்பட முடியாது எனவும் நிறுவனங்கள் வியாபார ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் மூடப்படுவதாகவும் லக்மாலி ஹேமசந்திர தெரிவித்துள்ளார் .(ஐ)

## உலக அழகிப் போட்டி: முக்கிய பிரிவில் இலங்கை அழகிக்கு இரண்டாம் இடம்



இந்தியாவின் தெலுங்கானாவில் நடைபெறும் உலக அழகி போட்டியின்போது, மிஸ் வேர்ல்ட் மல்டிமீடியா என்ற சவாலில், ஆசியாவிலிருந்து இரண்டாவது வெற்றியாளராக, இலங்கை அழகி அனுதி குணசேகர தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, குறித்த மைல்கல்லை எட்டிய முதல் இலங்கையர் இவராகும் என்று, அவரது ஊடகக் குழு தெரிவித்துள்ளது.

இந்த சாதனையின் மூலம், 108 பங்கேற்பாளர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மல்டிமீடியா சவாலின் முதல் 8 உலகளாவிய வெற்றியாளர்களில், மதிப்புமிக்க இடத்தையும் அனுதி குணசேகர பெற்றுள்ளார்.

இதேவேளை இறுதிப்போட்டி நாளை நடைபெறும் போது புதிய உலக அழகி முடிசூட்டப்படவுள்ளார்.'(ஐ)

# கேரளாவில் கனமழைக்கு 7 பேர் பலி: முழு கொள்ளளவை எட்டிய 4 அணைகள் திறப்பு



கேரளாவில் பெய்து வரும் கனமழைக்கு இதுவரை 7 பேர் பலியாகி உள்ளனர். இடுக்கி மாவட்டத்தில் 4 அணைகள் திறக்கப்பட்டு உள்ளன.

வழக்கத்துக்கு மாறாக முன்கூட்டியே மே 24ம் தேதி கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளது.

இடைவிடாது கனமழை பெய்து வருவதால் பல்வேறு மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இடுக்கி, கண்ணூர், காசர்கோடு மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மலப்புரம், கோழிக்கோடு, கொல்லம், பத்தனம்திட்டா என பல மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது. இதையடுத்து, முன் எச்சரிக்கையாக கல்வி நிறுவனங்களுக்கு அந்தந்த கலெக்டர்கள் விடுமுறை அறிவித்துள்ளனர்.

மழை காரணமாக, இடுக்கி மாவட்டத்தில் 103 வீடுகள் பகுதியாகவும், 9 வீடுகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளன. தற்போதுள்ள சூழலில் 10 நிவாரண முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. கல்லார்குட்டி, மலன்காரா, பொன்முடி, பாம்பலா அணைகள் திறக்கப்பட்டுள்ளன. மூவன்புலா ஆறு அபாய கட்டத்தை தாண்டி உள்ளது.

எர்ணாகுளம் திருமராடி பகுதியில் மரம் விழுந்ததில் அன்னகுட்டி சாக்கோ (80) என்பவர் பலியானார். ஆலப்புழா அருகில் புன்னம்பரா பகுதியில் நீரில் மூழ்கி ஜேம்ஸ்(65) என்பவர் உயிரிழந்தார். மாநிலத்தில் மொத்தம் மழைக்கு இதுவரை 7 பேர் பலியாகி உள்ளனர்.

கனமழை தொடர்ந்து நீடிப்பதால் அனைத்து துறை அதிகாரிகளும் முழு வீச்சில் கண்காணிப்பு மற்றும் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அணைகளின் நீர் இருப்பையும், அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். (ஐ)

## ரூ.639 கோடியில் 40 மாடி 2 சொகுசு பங்களாக்கள் விலைக்கு வாங்கி அதிர வைத்த இந்திய பெண் தொழிலதிபர்



இந்திய பெண் தொழிலதிபர் ஒருவர் ரூ.639 கோடியில் சொகுசு பங்களாக்களை வாங்கி அனைவரையும் திரும்பி பார்க்க வைத்துள்ளார்.

நாட்டின் முக்கிய வர்த்தக நகரான மும்பையில் சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகள் ஏராளம். இவை அனைத்தும் திரை பிரபலங்கள், விளையாட்டு வீரர்கள், பெரும் தொழிலதிபர்களுக்கு சொந்தமானதாக இருக்கும். அப்படி நட்சத்திர அந்தஸ்தை பெற்றுள்ள மும்பையில் பெண் தொழிலதிபர் ஒருவர் ரூ.639 கோடியில் 40 அடுக்குமாடிகள் கொண்ட 2 சொகுசு பங்களாக்களை தமக்கு சொந்தமாக்கி கொண்டிருக்கிறார்.

அவரது பெயர் லீனா காந்தி திவாரி. யுஎஸ்வி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர். வொர்லியில் நமன் சனா பகுதியில் அரபிக்கடலை பார்த்தபடி அவர் வாங்கிய உள்ள பங்களாக்களின் பரப்பளவு மட்டும் 22,572 சதுர அடி.

ஒரு சதுர அடியின் விலை மட்டுமே ரூ.2.83 லட்சம். பத்திரப்பதிவு ஆவணங்களின் படி இவர் செலுத்திய ஜி.எஸ்.டி., தொகை மட்டுமே ரூ. 63.9 கோடியாகும். ஒட்டு மொத்தமாக பார்த்தோமானால் கிட்டத்தட்ட லீனா காந்தி வாங்கிய 2 சொகுசு குடியிருப்புகளின் விலை ரூ.703 கோடி. இது இந்தியாவிலேயே மிகவும் அதிக விலைக்கு வாங்கப்பட்ட சொத்து என்று கூறப்படுகிறது.

வொர்லியில் ஆடம்பர சொத்துகள் வாங்குவது என்பது புதிய விஷயமல்ல. அண்மையில் இதே வொர்யில் கோடக் மஹிந்திரா வங்கியின் நிறுவனர் உதய் கோடக் மற்றும் அவரது குடும்பத்தினர் 22 அடுக்குமாடி குடியிருப்புகளை கொண்ட ஒரு முழு சொகுசு குடியிருப்பு கட்டடத்தை வாங்கினர். அதன் விலை ரூ.400 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)



## அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார் விஜய்

த.வெ.க., தலைவர் விஜய் 10, 12ம் வகுப்புகளில் சிறந்த மதிப்பெண்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு விருது வழங்கி கௌரவித்தார்.

தமிழகம், புதுச்சேரியில், 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 தேர்வு முடிவுகள், சமீபத்தில் வெளியாகின. இந்த தேர்வுகளில், சட்டசபை தொகுதி வாரியாக, அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நேரில் அழைத்து பாராட்டினார்.

இந்நிலையில் இன்று(மே 30) சென்னை அடுத்த மாமல்லபுரத்தில் உள்ள ஹோட்டலில் விஜய் கல்வி விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. 600க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் அவர்களின் பெற்றோர் என 2000க்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இதில், சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களில் உள்ள 88 சட்டசபை தொகுதிகளை சேர்ந்த மாணவர்களுக்கு விருது வழங்கி விஜய் பாராட்டினார் . அவர் பேசுகையில், 'நீட் படிப்பு மட்டுமே படிப்பு அல்ல. அதற்கு வெளியே இன்னும் ஏராளமான படிப்புகள் உள்ளன. மாணவ மாணவியர், எக்காரணம் கொண்டும் ஓட்டுக்கு காசு வாங்க கூடாது என்று பெற்றோரை வலியுறுத்த வேண்டும் ' என்று வலியுறுத்தினார்.

பெற்றோர் முன்னிலையில், மாணவர்களுக்கு சான்றிதழ், ஊக்கத்தொகை ஆகியவற்றை, த.வெ.க., தலைவர் விஜய் வழங்கினார். விருது பெற்ற மாணவர்களுடன் விஜய் புகைப்படம் எடுத்து கொண்டார்

(ஐ)

## பஞ்சாபில் பட்டாசு தொழிற்சாலையில் பயங்கர வெடிவிபத்து: 5 பேர் பலி 34 பேர் காயம்

பஞ்சாபில் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 5 பேர் உடல் கருகி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

பஞ்சாபின் ஸ்ரீ முக்த்சர் சாஹிப் மாவட்டத்தில் பட்டாசு தொழிற்சாலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வழக்கம் போல் பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது திடீரென பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் 34 பேர் பலத்த காயம் அடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. வெடி விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணை நடந்து வருகிறது. விபத்தில் இரண்டு மாடி கட்டடம் இடிந்து தரமட்டமாகியது.

இறந்தவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்கள் உத்தரபிரதேசம் மற்றும் பீஹாரில் இருந்து குடியேறியவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்தது. (ஐ)





# நீ தேடும் வாழ்க்கை உனைத் தேடுதே!

ஏன் நம்மை அறிய வேண்டும்? என்னை எனக்குத் தெரியாதா என்பவர்களுக்காக ஒரு சிறிய பயிற்சி.

தனியாக இருக்கும் போது, ஒரு பேப்பரை எடுத்துக்கொண்டு, உங்களது மொத்த நாளில் எப்போதெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்று யோசித்து எழுதுங்கள். அதாவது என்ன செய்து கொண்டிருக்கும் போது முழு மகிழ்ச்சியாக உணர்கிறீர்கள்?

சிலருக்கு ஒரு கேள்வி வரலாம். நான் எப்போதுமே மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன், தனியாக எதை எழுதுவது என.

எந்த வேலையைச் செய்யும் போது நீங்கள் உங்களை மறந்து போகிறீர்களோ, எப்போது நீங்கள் பசி, தூக்கம், தாகம் தாண்டி முழு ஈடுபாட்டுடன் இருக்கிறீர்களோ, எதைச் செய்யும் போது மொபைல் எடுத்துப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லையோ, அந்த வேலைதான் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் வேலை. அது பயனுள்ள வேலையாகத்தான் இருக்க வேண்டுமென்ற எந்த அவசியமும் இல்லை. அதைச் செய்யும் போது உங்கள் உடலும் மனமும் ஒன்றிப் போகிறது. நேரம் போவதே தெரியவில்லை. பசி, தூக்கம் மறந்து போகிறதென்றால் அதுதான் உங்களின் மகிழ்ச்சி. அதுதான் உங்களது அடையாளம்.

ஒரு வேளை இன்றுள்ள வாழ்க்கையில் அப்படி எதுவும் இல்லாமலிருக்கலாம். சற்று நினைவுகளில் பின்னோக்கி நீந்துங்கள். நீங்கள் சிறு குழந்தையாக இருந்ததில் இருந்து யோசித்துப் பார்த்தால், எப்போதேனும் அப்படி ஒரு விஷயத்தைச் செய்திருப்பீர்கள். மிகவும் மகிழ்ந்து உங்களைக் கொண்டாடி இருப்பீர்கள். அது என்ன என்று யோசியுங்கள்.

அது பாட்டு, நடனம், ஓவியம், வாத்தியம் என்று கலை சம்பந்த பட்டதாக இருக்கலாம். எழுத்து, பேச்சு எனவும் இருக்கலாம். ஒரு சிலர் பொதுச் சேவையில் தன்னை மறந்து ஈடுபடுவர். ஒரு சிலருக்கு மற்றவருக்குச் சொல்லிக் கொடுப்பதில் தனி இன்பம் கிடைக்கலாம். சிலருக்கு விதவிதமான ஆடைகளை வடிவமைப்பது, அணிபவருக்கு ஏற்றவாறு சரியான ஆடையைத் தேர்ந்தெடுப்பது போன்ற தனித்திறமைகள் இருக்கலாம். சிலருக்கு லாவகமாக வாகனம் ஓட்டுவது, விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வது, புதிய மொழிகளைக் கற்றுக்கொள்வது, படங்கள் பார்த்து நிறை குறைகளை அலசுவது, கணித புதிர்களுக்கு விடை சொல்வது, விதவிதமாகத் துணி தைப்பது, சின்ன குழந்தைகளுடன் விளையாடுவது, வீட்டைப் படு சுத்தமாகப் பராமரிப்பது, வித விதமாகச் சமைப்பது என்று ஆர்வம் இருக்கலாம். உங்கள் ஆர்வம் எதில் என்று கண்டறியுங்கள். உங்கள் ஆர்வம் மற்றவரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டிய எந்த அவசியமும் இல்லை. நீங்கள் நீங்களாக இருக்க உங்கள் ஆர்வமும் தனித்திறமையும் உதவப் போகிறது அவ்வளவே.


உங்கள் ஆர்வம் எது என்று கண்டறிந்த பின் அடுத்து செய்ய வேண்டிய வேலை அதற்காகத் தினமும் சிறிது நேரம் ஒதுக்குவது. அது பயனற்ற நேரமல்ல. உங்களுக்காக நீங்கள் செய்யும் முதலீடு. இந்த நேரம் இருந்தால் நான் இன்னும் கொஞ்சம் அலுவலக வேலை பார்த்து முன்னேறுவேனே, வீட்டை இன்னும் கொஞ்சம் நன்றாக வைத்திருப்பேனே, இன்னும் இரண்டு வித உணவு தயாரித்து இருப்பேன் என்று எண்ண வேண்டாம். உங்களது தினசரி வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்ய அந்த நேரம் உதவும்.



ஒரு பெண்மணி, “விடிந்து எழும்போதே இட்லி மாவிலும் வெங்காயம் தக்காளியிலும்தான் விழிக்க வேண்டி இருக்கு“ என்று அலுத்துக்கொள்வார். அவருக்கு அந்த நிலை பிடிக்காத பட்சத்தில் மாற்றுவதற்கு ஏதேனும் முயற்சி செய்திருக்கலாம். ஆனால், அவருக்கு அந்த தைரியம் இல்லை. எங்கே தன் அலுப்பை வெளிகாட்டினால் வீட்டினர் மதிக்க மாட்டார்களோ என்கிற பயம். ஒரு பாதுகாப்பற்ற உணர்வு. வியாழக்கிழமை வந்தால் வெள்ளியன்று பூஜை செய்ய வேண்டுமே என அலுத்துக்கொண்டே பூஜை பாத்திரங்களைச் சுத்தம் செய்வார்கள். எந்தக் கடவுள் இத்தனை அலுப்புடன் பூஜை செய்யச் சொன்னார். ஆனால், அவர்களின் பாதுகாப்பற்ற உணர்வும், விருப்பமில்லாத வேலையும் சேர்ந்து அவருக்கு வாழ்க்கையைச் சலிக்கவும் வெறுக்கவும் வைத்துவிட்டது. ஒரு வேளை அவர் தன் விருப்பமான விஷயத்திற்காகத் தினமும் சிறிது நேரம் செலவிட்டிருந்தால் இத்தனை சலிப்பு அவருக்கு வந்திருக்காது. இதே வேலையை இன்னும் உற்சாகத்துடன் செய்திருப்பார். சுய பச்சாதாபமும், சலிப்பும் அவர் வாழ்க்கையை வீணாக்கிவிட்டது. அதற்காகப் பிடிக்காத வேலையைச் செய்துதான் ஆக வேண்டுமா என்று கம்பு சுற்ற வேண்டாம். நமக்கு விருப்பமல்லாத வேலையை நாம் செய்தே ஆக வேண்டுமென்கிற எந்தக் கட்டாயமும் இல்லை.

பிடித்த விஷயத்தைச் செய்வதற்கான உரிமையும், பிடிக்காத விஷயத்தைச் செய்யாமல் இருப்பதற்கான சுதந்திரமும் பூமியில் உள்ள அனைவருக்கும் உண்டு. ஆனால், நம் முந்திய தலைமுறை முதிய பெண்கள் பெரும்பாலோர் தனது சுதந்திரத்தைப் பற்றி யோசித்ததுகூட இல்லை. இன்றைய தலைமுறையிலும் நிறைய பேர் அதைப் பற்றி யோசித்தாலும் செயல்படுத்தும் தைரியமற்றவர்களாக உள்ளனர். அவர்களிக்கான ஒரே ஆசுவாசம், தன்னை அறிதலும் அதைச் செயலுக்குக் கொண்டு வருவதும்தான். அவர்களுக்கான ஒரே விடை சுய நேசம்தான். சுய நேசத்தை வாழ்வில் ஓர் அங்கமாகக் கொண்ட ஒருவர் நிச்சயம் ஒரு நேரத்தில் தன் வாழ்வைக் கையிலெடுப்பர். கொண்டாட்டமாக மாற்றுவர்.

# உக்ரைனில் போர் நிறுத்தம்: ஐ.நா.,வில் புடினுக்கு அமெரிக்கா வலியுறுத்தல்



உக்ரைனில் 30 நாள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளு மாறு,ரஷ்யாவை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா வலியுறுத்தியது.

ரஷ்யா - உக்ரைன் போர் கடந்த 2022ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சிக்கிறார். இது தொடர்பாக சமீபத்தில், புடினுடன் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தினார். இந்நிலையில், உக்ரைனில் 30 நாள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு,ரஷ்யாவை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா வலியுறுத்தியது.

உக்ரைனுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் ஜெர்மனி அதிபர் மெர்ஸ் எடுத்த முடிவு

போர்நிறுத்த ஒப்பந்தம்நிராகரிக்கப்பட்டால் பொருளாதாரத்தடைகள்விதிக்கப்படும்என்று அமெரிக்கா எச்சரித்தது. உக்ரைன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால் ரஷ்யா தரப்பில் இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை.

ஐ. நா., பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்க துணைத் தூதர் ஜான் கெல்லி பேசியதாவது: உக்ரைனில் அமைதியை உருவாக்க ரஷ்யாவுடன் நாங்கள் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். இந்த மோதலுக்கு ராணுவ தீர்வு முடிவு அல்ல.

அதே நேரத்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பை தொடர்ந்தால், அமெரிக்கா அமைதி பேச்சுவார்த்தைகளில் இருந்து பின்வாங்கி கடுமையான பொருளாதார தடைகளை விதிக்க வேண்டியிருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ)

# டிரம்பின் ‘அழகான மசோதா’வுக்கு எதிரப்பு பதவி விலகினார் தொழில் அதிபர் மஸ்க்



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நிர்வாகத்துக்கு, செலவினங்களை குறைப்பதற்காக ஆலோசனை வழங்கும் அமைப்பில் இருந்து விலகுவதாக தொழிலதிபர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபருக்கு கடந்தாண்டு இறுதியில் நடந்த தேர்தலின்போது, குடியரசு கட்சியின் டொனால்டு டிரம்புக்கு, பணக்கார தொழிலதிபரும், டெஸ்லா நிறுவன தலைவருமான எலான் மஸ்க் ஆதரவு தெரிவித்தார்.

ஆட்சி நிர்வாகத்துக்கு வந்தபின், அரசின் வீண் செலவுகளை குறைக்கவும், நிர்வாக சீர்திருத்தங்கள் செய்யவும், டி.ஓ.ஜி.இ., எனப்படும் சிறந்த அரசு நிர்வாகத்துக்கான துறை என்ற அரசு நிர்வாகம்சாராத ஆலோசனை அமைப்பை உருவாக்குவதாக டிரம்ப் கூறியிருந்தார்.

இதன்படி, இந்தாண்டு ஜன., 20ல் பதவியேற்றதும், இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக, அதாவது டிரம்புக்கு ஆலோசகராக, எலான் மஸ்க் பதவியேற்றார்.

அரசின் செலவினத்தில், 170 லட்சம் கோடி ரூபாய் குறைப்பதாக முதலில் உறுதி அளித்தார். பின், 85.4 லட்சம் கோடி ரூபாயாகவும், கடைசியில் 12 லட்சம் கோடி ரூபாயாகவும் இலக்கை குறைத்தார். ஆனால், அதையும் செய்ய முடியவில்லை.

முதலில் அதிரடியாக பல துறைகளுக்கான பட்ஜெட்களை குறைத்தார். பல துறைகளில் இருந்து ஆட்களை அதிகளவில் வெளியேற்றினார். இவ்வாறு எலான் மஸ்க் கூறியதை எல்லாம் டிரம்ப் செயல்படுத்தி வந்தார்.

இதனால், அரசு துறைகள், எம்.பி.,க்கள், கட்சியினர், மக்களின் கடும் அதிருப்தி, எதிர்ப்பை எலான் மஸ்க் மற்றும் டிரம்ப் சந்திக்க நேர்ந்தது. பல வழக்குகளையும் சந்திக்க நேர்ந்தது.

இதற்கிடையே, எலான் மஸ்க் மற்றும் டொனால்டு டிரம்ப் இடையே, பல விஷயங்களில் கருத்து மோதலும் ஏற்பட்டது.

‘ஏற்கனவே, 130 நாட்கள் மட்டுமே இந்த பொறுப்பில் இருப்பேன் என்று கூறியிருந்தேன். அதன்படி என் பணிக்காலம் முடிந்ததால், அரசு நிர்வாகப் பொறுப்பில் இருந்து விலகுகிறேன். அதே நேரத்தில், இந்த அமைப்பு தொடரும்’ என, எலான் மஸ்க் நேற்று சமூக வலைதளத்தில் பதிவிட்டார்.

‘செலவினங்களை குறைப்பது, நிர்வாக சீர்திருத்தம் செய்வது தேவைதான். ஆனால், இதுவரை, எலான் மஸ்க் என்ன உருப்படியாக செய்தார் என்பது தெரியவில்லை’ என, அரசு உயரதிகாரிகள் கூறுகின்றனர்.

டிரம்ப் உடனான இந்த அரசு நிர்வாகத் தொடர்பை எலான் மஸ்க் முறித்துக் கொள்வதற்கு, முக்கிய காரணமாக கூறப்படுவது, ‘பெரிய அழகான மசோதா’ என்று தகவல் வெளியாகி உள்ளது.

டிரம்ப் சமீபத்தில் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இந்த மசோதா, குறுகிய பெரும்பான்மையில், பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியுள்ளது. அடுத்தது, செனட் சபையில் நிறைவேற வேண்டும்.

ஆயிரம் பக்கத்துக்கு மேல் உள்ள இந்த மசோதாவில், 2017ல் டிரம்ப் கொண்டு வந்த வரி சீர்திருத்தங்களை நீட்டிப்பது, வரிச்சலுகை அளிப்பது ஆகியவை முக்கிய அம்சமாகும். மேலும், குடியேற்றம் தொடர்பான நடைமுறைகளை கடுமையாக்குவதும் இதில் இடம்பெற்றுள்ளது.

ஆனால், இதற்கு, எலான் மஸ்க் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். ‘இது பெரியதும் இல்லை, அழகாகவும் இல்லை’ என, அவர் விமர்சித்திருந்தார். இது அரசின் செலவுகளை அதிகரிக்க செய்யும் என்பது அவரது வாதம்.

அதை டிரம்ப் ஏற்கவில்லை. ‘இந்த மசோதாவில் பெரியது, அழகு இரண்டும் உள்ளது. சில பிரிவுகளை நான் விரும்பவில்லை. ஆனாலும், ஒட்டுமொத்தமாக இது மிகப் பெரிய பலனை அளிக்கும். நடைமுறைக்கு வந்த பிறகே, அதன் பலன் தெரியும்’ என, டிரம்ப் கூறியுள்ளார்.

எலான் மஸ்கை விமர்சித்துள்ள குடியரசு கட்சியினர், டிரம்பின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த சூழ்நிலையில்தான், இதற்கு மேலும் இருந்தால் எந்த பிரயோஜனமும் இல்லை என, ஆலோசகர் பதவியில் இருந்து எலான் மஸ்க் விலகியுள்ளதாக கூறப்படுகிறது. (ஐ)

# பஹல்காம் தாக்குதலுக்கு மூளையாக இருந்த பாகிஸ்தான் பயங்கரவாதி சுதந்திரமாக உலா



பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய கோர தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட சைபுல்லா காலித், பாக்., ராணுவத்தினரின் பாதுகாப்புடன், அங்கு நடந்த பேரணியில் பங்கேற்றார்.


ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தி, இந்திய சுற்றுலா பயணியர், 26 பேரை சுட்டுக் கொன்றனர். அந்த தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர்களில் லஷ்கர் - இ - தொய்பா பயங்கரவாத அமைப்பின் முன்னணி கமாண்டர்களில் ஒருவரான சைபுல்லா கசூரி என்ற காலித்தும் ஒருவர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் நடத்திய பேரணியில், சைபுல்லா காலித் மற்றும் லஷ்கர் – இ – தொய்பா பயங்கரவாத அமைப்பின் நிறுவனர் ஹபீஸ் சயீத்தின் மகனான தல்ஹா சயீத், மாகாண அமைச்சர் மாலிக் அஹமது கான் பங்கேற்றனர்.

பேரணியில் பயங்கரவாதிகள் இருவரும் பங்கேற்ற படங்கள், ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. சைபுல்லா காலித், தல்ஹா சயீத்திற்கு பாகிஸ்தான் ராணுவத்தினர் பாதுகாப்பு அளித்தனர்.

‘பாகிஸ்தானில் பயங்கரவாதிகளே இல்லை எந்த பயங்கரவாதிக்கும் பாக்., ராணுவம் பாதுகாப்பு மற்றும் ஆதரவு அளிக்கவில்லை’ என கூறி வரும் அந்நாட்டின் அமைச்சர்கள், ராணுவ வீரர்கள் பாதுகாப்புடன் நடந்த சைபுல்லா காலித் மற்றும் தல்ஹா சயீத் பங்கேற்ற பேரணிக்கு என்ன பதில் சொல்லப் போகின்றனர் என தெரியவில்லை.

# டிரம்ப்பின் இறக்குமதி வரி விவகாரம் தற்காலிக அனுமதி வழங்கியது உச்சநீதிமன்றம்



அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்த இறக்குமதி வரி விதிப்பு நடவடிக்கைக்கு அந்நாட்டு உச்சநீதிமன்றம் தற்காலிக அனுமதி வழங்கியது.

அமெரிக்க அதிபர் டிரம்ப், கடந்த ஏப்., 2ம் தேதி இந்தியா, சீனா உட்பட பல்வேறு நாடுகளுக்கு பரஸ்பர வரியை அறிவித்தார். டிரம்ப் அரசின் இந்த நடவடிக்கையால் அமெரிக்க பொருளாதாரம் சீர்குலைந்து விட்டதாகக் கூறி பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்தது. அப்போது, 1977ம்ஆண்டு சர்வதேச அவசர பொருளாதார அதிகார சட்டத்தின் அடிப்படையில் வரியை டிரம்ப் உயர்த்தியதாக தெரிவிக்கப்பட்டது.

டிரம்ப் விதித்த வரிக்கு அமெரிக்க நீதிமன்றம் தடை அமெரிக்க நீதிமன்றம் அதிரடி

ஆனால், அதிபரின் அவசர தீர்மானம் சட்ட ரீதியாக செல்லுபடியாகுமா என்பதை பார்லிமெண்ட் விவாதிக்க முடியும். நீதிமன்றம் விசாரிக்க முடியாது என அதிபர் தரப்பில் வாதிடப்பட்டது. இதை நிராகரித்த அமெரிக்க வர்த்தக நீதிமன்றம், உலக நாடுகளின் மீதான பரஸ்பர வரி விதிப்புக்கு தடை விதித்தது.

நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் கடுமையாக விமர்சித்தார். அரசின் வரிவிதிக்கும் முறைக்கு தடை விதிப்பது நீதித்துறையின் அத்துமீறல் என்று விமர்சித்தார். மேலும், தேர்வு செய்யப்படாத நீதிபதிகள் அதிபரின் முடிவுக்கு தடை விதிப்பது ஆபத்தான போக்கு என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இந்தத் தீர்ப்பை எதிர்த்து அமெரிக்க அதிபர் டிரம்ப் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. வரிவிதிப்பு முறையில் நீதிமன்றம் தடை விதித்த விவகாரத்தில் அவசர நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், டிரம்ப்பின் வரிவிதிப்பு நடவடிக்கைக்கு தற்காலிகமாக அனுமதி வழங்கி உத்தரவிட்டது. இது உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. (ஐ)

## ஏனையோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் ஜூன் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி முதியவரிடம் நாடு திரும்புவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்கள் இருந்தும், சர்வதேச சட்டப்படி அவர் ஓர் அகதி என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அவரைப் பிணையில் விடுவிக்க எதிர்ப்புத் தெரிவித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

"இந்தச் சம்பவமானது நாடு திரும்புவதற்குத் தயாராக இருக்கும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள், நாட்டுக்குப் பயந்து வராமல் இருப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளா?" - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஏம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

## உங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஊழல் பேர்வழிகளைக் கைது செய்து சிறையில் அடையுங்கள். அதைச் செய்யத்தான் வேண்டும். இன்னமும் நானூற்றுக்கணக்கான ஊழல் கோப்புகள் இருப்பதாகச் சொன்னீர்கள். அனைவரையும் கைது செய்து, விசாரித்து, ஆவன செய்யுங்கள். சட்டத்தில் இடமிருந்தால் ஊழல் பேர்வழிகளுக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்குங்கள். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எதற்காகத் தமிழக முகாமில் முப்பது வருடங்களுக்கு மேல் வாழ்ந்து, வயோதிபம் அடைந்து, உங்களை நம்பி, நாடு திரும்பிய, 75 வயதான சின்னையா சிவலோகநாதனை விமான நிலையத்தில் கைது செய்தீர்கள்? அவரை இன்று பிணையில் வெளியே விடாமல் எதற்காகச் சிறையில் அடைக்கிறீர்கள்?

வெளிநாடு சென்ற தமிழர்களைத் திரும்பி "வாங்கோ, வாங்கோ" என நீங்கள் தானே வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறீர்கள்? உங்களை நம்பி வந்தால், திரும்பி வந்தால் விமான நிலையத்தில் கைது செய்வதா?

சிவலோகநாதனுக்கு நாடு திரும்ப சென்னை இலங்கைத் துணைத் தூதரகம்தான் கடவுச்சீட்டு வழங்கி உள்ளது என்பது அரசுக்குத் தெரியாதா? வெளிநாட்டு அமைச்சுக்குத் தெரியாதா? தமிழக அரசின் பொலிஸ், பாரத மத்திய அரசின் குடிவரவு, குடியகல்வு வாரியம் என்பன ஒப்புதல் அளித்துள்ளன.

ஐ.நா. அகதிகள் ஆணைக்குழு, சிவலோகநாதனுக்குப் பயண சீட்டு வாங்கிக்கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, விமானமேற்றி அனுப்பி வைத்துள்ளது. இவை உங்களுக்குத் தெரியாதா? வெளிநாடு சென்ற தமிழர்களை நீங்கள்தானே திரும்பி வரச் சொல்கிறீர்கள்? உங்களை நம்பி நாட்டுக்கு வந்தால் கைதா? " - என்றுள்ளது.

## யாழ்.மாவட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இணைத் தலைவரான வடக்கின் மகாணா ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரது இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், கே.இளங்குமரன், ஸ்ரீ பவானந்தராஜா, ஜெ.றஜீவன், இ.அர்ச்சுனா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலக மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், கிராம சேவகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதி, அதனூடாக செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மேலும், துறை ரீதியான முன்னேற்றம் குறித்த மீளாய்வில் சேவைத்துறைகள் சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்தும் பேசப்பட்டன.

அத்துடன் விவசாயம், மருத்துவம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைசார் விடயங்கள் விவாதிக்கப்பட்டன. குறிப்பாக, அம்புலன்ஸ் சாரதிகள் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டன.

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டைபறிச்சான் பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய வயோதிபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த வயோதிபர், தனது வயலுக்குக் குருவிக் காவலுக்குச் சென்றபோது கணேசபுரம் வீதியில் வைத்து காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கொழும்பில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிற ஆடை ஒன்றை அணிந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலமானது அடையாளம் காண்பதற்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தோட்ட அதிகாரிகள் தமிழ் இளைஞர் மீது தாக்குதல்! உடன் நடவடிக்கை எடுக்குமாறு மனோ வலியுறுத்து

கொழும்பு, மே 30

"ஆலயச் சிலை பீடத்தில் பாதணியுடன் காலைத் தூக்கி வைக்க வேண்டாம் என்று சொன்ன, கமலநாதன் இமேஷ்நாதன் என்ற தமிழ் இளைஞரை, "நீ கும்பிடுவது, சிலையின் தலையா? காலையா? உங்கட சாமி தலையிலயாடா காலை வைத்தோம்" எனக் கொச்சைத் தமிழில் திட்டி, அனுர, சந்துன் என்ற இரண்டு, தோட்ட வெளிக்கள அலுவலர்கள் தாக்கியுள்ளனர்." - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

"இந்தத் தகவலை எமது அவிசாவளை புவக்பிட்டிய அமைப்பாளர் சசிகுமார் என் கவனத்துக்குக் கொண்டு வந்த நிலையில் இது பற்றி உறுதியான மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு அவிசாவளை பொலிஸ/க்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்ன, நிலையப் பொறுப்பதிகாரி ஜெயலத், இளநிலை அதிகாரி ராஜரத்ன ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளேன். அவர்களும் உறுதியான நடவடிக்கை எடுப்பதாக எனக்கு உறுதி அளித்துள்ளனர்." - என்றும் மனோ குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:-

"தற்சமயம் காயமடைந்த கமலநாதன் இமேஷ்நாதன் அவிசாவளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உடலின் உயிர்நிலை பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

கமலநாதனைத் தாக்கிய, சந்தேக நபர்கள் இருவரும், மிகவும் சூட்சுமமான முறையில் தாமும் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறி, அதே அவிசாவளை மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாகக் கூறி தங்கியுள்ளார்கள். இது பற்றியும் நான் பொலிஸ் அதிகாரிகளிடம் கூறியுள்ளேன்." - என்றார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர்!



கிளிநொச்சி மாவட்டத்தின் குஞ்சுப்பரந்தன் முதல் குடமுருட்டி வரையான கரையோரப் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களை கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பகுதிக்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதனால் பெருமளவான வயல்நிலங்கள், நீர்ப்பாசன கட்டுமானங்கள் என்பன சேதமடைந்து வருவதாகவும் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புகளால் அமைச்சருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையிலேயே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், கிளிநொச்சி மாவட்டத்தின் குஞ்சுப்பரந்தன் முதல் குடமுருட்டி வரையான கரையோரப் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன், இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்து சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனும் உடனிருந்தார் என்பது குறிப்பிடதக்கது.

# மஹிந்தானந்த மற்றும் நளின் பெர்னாண்டோ வெலிக்கடை சிறையில்!

*கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோ ஆகியோர் வெலிக்கடை சிறையில் பொதுவான கைதிகள் வைக்கப்படும் பொது அறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.*

*அதன்படி இருவருக்கும் சிறைச்சாலை உடை அணிவிக்கப்பட்டு, தூங்குவதற்கு பாய் மற்றும் தலையணை வழங்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, சதொச ஊடாக 14,000 கேரம் பலகைகளை கொள்வனவு செய்ததன் மூலம் 53 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.*

*இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தின் இயக்குநர் ஜெனரல், இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 70 இன் கீழ் இரண்டு பிரதிவாதிகள் மீதும் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.*

*இதற்கான வழக்கு விசாரணை நேற்று (29) மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*இதன்போது குறித்த இருவரும் குற்றவாளிகள் என தெரிவித்து சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருட கடூழிய சிறைத்தண்டனையும், முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகேவுக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

*இதுதவிர பிரதிவாதிகளான நளின் பெர்னாண்டோவுக்கு 4 இலட்சம் ரூபாய் அபராதமும், மஹிந்தானந்த அலுத்கமகேவுக்கு 2 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2025 வெளியிடப்பெற்றது.